**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-38** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவிச்சந்திரன் | Father's Name : | | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of August 2025.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி ஆகிய **1, 3** முதல் **6** எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**8** ஆம் எதிரி ஆஜரில்லை**.**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

<u>ஆரம்பிக்கும் நேரம் **11.30** மணி</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சேலம் மாநகராட்சியில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.03.2021 ஆம் தேதி கரூர் ஊரக உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.C.No.1/SJ & HR / SP-Karur/2021 தேதி 12.03.2021 ன் உத்திரவுபடி வேலாயுதம்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.778/2020 U/s.147, 148, 302 இ.த.ச. @ 147, 148, 120(b), 302 இ.த.ச. r/w 3(1)(x), 3 (1)(x1), 3(2b) of SC & ST (POA) Amendment Act 2016 ன்படி மேற்படி வழக்குக்கோப்பை வேலாயுதம்பாளையம் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் சிதம்பரபாரதி என்பவரிடம் கடந்த 13.03.2021 ஆம் தேதி வழக்குக்கோப்பை பெற்று தொடர் விசாரணை மேற்கொண்டேன். எனக்கு காவல் துறை கண்காணிப்பாளர் வழங்கிய ஆவணம் இதுதான். <u>அது அ**.**த**.**சா**.**ஆ**.45** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.**</u> மேற்படி வழக்குக்கோப்பை படித்துப் பார்த்ததில் இவ்வழக்கின் எதிரிகள் 9 நபர்களை காவல்படுத்தியும், அவர்களிடமிருந்து வழக்குச்சொத்துக்களை கைப்பற்றியும், மேற்படி வழக்குச்சொத்துக்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து R.P.No. பெற்றும், மேலும், சம்பவயிடத்தில் கைப்பற்றிய

வழக்குச்சொத்துக்களையும், பிரேத பரிசோதனையின்போது கைப்பற்றிய உடமைகளையும், பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுருப்புகளையும், ராசயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டிருந்தது. மேலும், இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோனவருக்கும், மற்றும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் ஜாதி சான்று கேட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு, 13.03.2021 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவயிடமான வேலாயுதம்பாளையம், காவல் நிலைய சரகம், பைபாஸ் ரோட்டில் உள்ள மூலிமங்கலம் பிரிவு ரோடு அருகே சென்று 91 கா/பெ கடை அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டதில் ஏற்கனவே காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்திருந்தார். அது சரியாக இருந்ததால் நான் தனியாக மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. அந்த மாதிரி வரைபடம் ஏற்கனவே அ.த.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு, அன்று வரவழைக்கப்பட்ட சாட்சிகள் அ.சா.1.ரமேஷ், அ.சா.2 சுகுணா, காளியம்மாள், மாரியாயி, மோகன்ராஜ், அ.சா.3.ராமர், அ.சா.4 சிவக்குமார், அ.சா.7 திருமாவளவன், அ.சா.36 பிரகாஷ், அ.சா.8.ஜெயந்தி, அ.சா.6.அரசகுமார், முருகானந்தம், அ.சா.5.வான்மதி, அ.சா.13.விஜயனாந்தன் ஆகியோர்களை விசாரணை செய்ததில் ஏற்கனவே காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலம்

கொடுத்ததுபோல் சரியாக இருந்தது. அதனால் நான் தனியாக வாக்குமூலம் தயார் செய்யவில்லை. அதன் பிறகு கடந்த 15.03.2021 ஆம் தேதி புகளூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்று இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் கலையரசன், கோகுல்நாத், ஷேக்தாவூத், கிரி (எ) கிரிதரன் ஆஜர் எதிரிகள் ஆகியோர்களுக்கு துணை வட்டாட்சியர் ஜெகமணி என்பவர் வழங்கிய ஜாதி சான்றுகளை அவரிடம் காண்பித்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆஜர் எதிரிகள் கலையரசனின் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிகள் கோகுல்நாத் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிகள் ஷேக்தாவூத் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிகள் கிரி (எ) கிரிதரன் ஜாதி சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு கடந்த 16.03.2021 ஆம் தேதி முன்னால் புகளூர் வட்டாட்சியர் வேலுச்சாமி அவர்களை எமது அலுவலகத்திற்கு வரவழைத்து இவ்வழக்கின் எதிரிகளான பிரபு மகன் பிரசாந்த், முனியன் மகன் பிரசாத் ஆகியோர்களுக்கு அவர் வழங்கிய ஜாதி சான்றிதழை அவரிடம் காண்பித்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமார் என்பவருக்கு ஜாதி சான்று வழங்கிய திருச்சி மேற்கு வட்டாட்சியர், ரமேஷ் என்பவரிடம் அவரது செல்போன் எண்.9445000602 என்ற எண்ணுக்கு

தொடர்பு கொண்டு மேற்படி ஜாதிசான்றிதழ் சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ரஞ்சித்குமார் என்பரின் ஜாதிசான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு கடந்த 17.03.2021 ஆம் தேதி கரூர் அரசு மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மணிவாசகம் அவர்களை சந்தித்து அவர்களிடம் பிரேத பரிசோதனை சான்று, ராசயன பகுப்பாய்வு சான்றிதழ், இறுதி கருத்துரை சான்றிதழ் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை சான்று ஏற்கனவே, அ.த.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை ஏற்கனவே அ.த.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ராசயன பகுப்பாய்வு மற்றும் இறுதி அறிக்கை அ.த.சா.ஆ.**46** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** அதன் பிறகு கடந்த 09.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய TN-48-J-1796 என்ற பதிவெண் உள்ள Hero Honda Splendor என்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் விபரம் கேட்டு ஸ்ரீரங்கம் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அன்றே மேற்படி வாகனத்தின் உரிமையாளர் அருள் என்ற விபரத்தை அளித்தார். அதன் பிறகு அன்றே இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய TN-47-AQ-8502 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பிளாட்டினம் மற்றும் TN-47-AT-5008 என்ற

பதிவெண் கொண்ட TVS Star Sports ஆகிய வாகனங்களின் உரிமையாளர்களின் விபரம் கேட்டு கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. அதன் விபரங்களை பெற்றேன். TN-47-AQ-8502 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பிளாட்டினம் ஏற்கனவே அ.த.சா.பொ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்குரிய பதிவு சான்றிதழ் அ**.**த**.**சா**.**ஆ**.47** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** TN-47-AT-5008 என்ற பதிவெண் கொண்ட TVS Star Sports ஏற்கனவே அ.த.சா.பொ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்குரிய பதிவு சான்றிதழ் அ**.**த**.**சா**.**ஆ**.48** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** TN-48-J-1796 என்ற பதிவெண் உள்ள Hero Honda Splendor ஏற்கனவே அ.த.சா.பொ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்குரிய பதிவு சான்றிதழ் அ**.**த**.**சா**.**ஆ**.49** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** அதன் பிறகு கடந்த 10.04.2021 ஆம் தேதி சாட்சிகள் அ.சா.22.நவீன்குமார், அ.சா.19.அருள், அ.சா.16.கண்ணபிரான், அ.சா.17.ஜெயிலாபுதீன், அ.சா.18.சதீஸ்குமார், அ.சா.15.மாயவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 12.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய TN-47-AQ-8502 என்ற வாகனத்தின் உரிமையாளர் சுரேஷ் என்றும், மற்றும் TN-47-AT-5008 என்ற வாகனத்தின் உரிமையாளர் நாகராஜன் என்றும் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து

அதன் விபரங்கள் சான்றிதழுடன் பெறப்பட்டது. அதன் பிறகு கடந்த 13.04.2021 ஆம் தேதி சாட்சிகள் அ.சா.20.கோபாலகிருஷ்ணன், அ.சா.21.சூர்யா, அ.சா.22.நவீன், அ.சா.23.சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 15.04.2021 ஆம் தேதி சாட்சிகள் ஜெயப்பிரகாஷ், சகுந்தலாதேவி, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 17.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் எதிரி உதயநிதி (எ) சூர்யா என்பவரிடம் சம்பவத்தின்போது பயன்படுத்திய சூரிகத்தியை கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஒப்படைத்து RP.No.6/2021 என பெறப்பட்டது. அந்த சூரிகத்தி ஏற்கனவே சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு கடந்த 19.04.2021 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்ட ரத்த மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய திருச்சி மண்டல தடய அறிவியல் அதிகாரி சிவசங்கரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 20.04.2021 ஆம் தேதி சாட்சி அப்பு (எ) முகமது அபு கிராயரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 21.04.2021 ஆம் தேதி இவ்வழக்கில் மதுரையை சேர்ந்த எதிரிகள் கூல்மணி (எ) மணிகண்டன், உதயநிதி (எ) சூர்யா, மற்றும் சீனிவாசன் ஆகியோர்களுக்கு ஜாதி சான்றுகள் வழங்கிய மதுரை தெற்கு வட்டாட்சியர் அணிஷ் சத்தா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கூல்மணி (எ) மணிகண்டன், உதயநிதி (எ)

சூர்யா, மற்றும் சீனிவாசன் ஆகியோர்களுக்கு ஜாதி சான்றுகள் ஏற்கனவே அ.த.சா.ஆ.20 ஆக மூவருக்கும் சேர்ந்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு கடந்த 24.04.2021 ஆம் தேதி சாட்சி விஜயனாந்தன் என்பவரை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 29.04.2021 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவம் குறித்து CCTV கேமராவில் பதிவு நிகழ்வுகளை மூன்று பென் டிரைவில் பதிவு செய்து பின்பு பென் டிரைவில் இருந்து CD ல் பதிவேற்றம் செய்தேன். நான் பதிவேற்றம் செய்த மூன்று பென் டிரைவ் ஏற்கனவே அ.த.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று CD ஏற்கனவே அ.த.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவை இரண்டிற்குமான 65 சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ.41 முதல் அ.த.சா.ஆ.43 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி CD ல் பதிவேற்றம் செய்து கொடுத்த சென்னை தடய அறிவியல் துறை துணை இயக்குநர் அ.சா.35.விசாலாட்சி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கடந்த 12.05.2021 ஆம் தேதி இவ்வழக்கின் விசாரணை முடித்து திருச்சி மண்டல துணை இயக்குநர் அவர்களிடம் மாதிரி குற்றப்பத்திரிக்கை பெற்று அதனடிப்படையில் சட்டப்பிரிவு 147, 148, 120(b), 302 இ.த.ச. r/w 3(1)(x), 3(1)(x1), 3(2)(v) SC&ST(POA) Amendment Act 2015 ல் இருந்து 147, 148, 120(b), 302 இ.த.ச. உ/இ 149 இ.த.ச. மற்றும் 3(2)(v) SC&ST (POA) Amendment Act 2015 ன்படி சட்டப்பிரிவினை மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு

அனுப்பி வைத்தேன். <u>**22.09.2022** ஆம் தேதியிட்ட ரத்தம் மாதிரி அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.**50** ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 19.02.2021** ஆம் தேதியிட்ட ரத்தம் மாதிரி அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.**51** ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 12.03.2021** ஆம் தேதியிட்ட ரத்தம் மாதிரி அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.**52** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.**</u> சான்றாவணம் 33 பென் டிரைவ் நீதிமன்ற கணிணியில் Play செய்யப்பட்டு அதில் மஞ்சள் நிற பனியன் மற்றும் நீல நிற கால்சட்டை போட்டு முன்னால் ஓடும் நபர் கொலையுண்டு இறந்துபோன நபர் ரஞ்சித்குமார். அவருக்கு பின்னால் வெள்ளை முழுக்கை சட்டையும், கருப்பு கலர் பேண்ட் அணிந்து செல்லும் நபல் கூல்மணி காலை தடுக்கிவிட்டதால் ரஞ்சித்குமார் கீழே விழுந்துவிட்டார். சூர்யா வால்கத்தியுடன் மஞ்சள்கலர் டீ சர்ட் பனியன், அரைக்கால் டிராயர் போட்டுக்கொண்டு கூல்மணியும், சூர்யாவும் இந்த வழக்கில் இருந்த பிரிக்கப்பட்டு 21/2023 வழக்கில் தற்போது எதிரிகளாக உள்ளார்கள். மஞ்சள் நில டீ சர்ட் போட்டுக்கொண்டு ஓடும் இரண்டாவது நபருக்கு பின்னால் பிரவுன்கலர் முழுக்கை சட்டை, அரைக்கால் டிராயர் போட்டு கொண்டு வீச்சருவாலுடன் ஓடி வருபவர் சீனிவாசன். (மேற்படி சீனிவாசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகிவில்லை அவர் தரப்பு வழக்கறிஞர் 317 கு.வி.மு.ச. மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆகையால் சீனிவாசன்

அடையாளம் காட்டப்பட்டுள்ளது என கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.)

நீதிமன்றத்தில் பென் டிரைவ் மூலம் திரையிடப்பட்டது. உணவு இடைவேலைக்கு பிறகு முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது**.**

முடியும் நேரம் **12.45** மணி

மதிய உணவு இடைவேலைக்கு பிறகு முதல் விசாரணை தொடர்ச்சி ஆரம்பிக்கும் நேரம் **5.10** மணி

சான்றாவணம் 33 பென் டிரைவ் நீதிமன்ற கணிணியில் Play செய்யப்பட்டு அதில் நீல நிற முழுக்கை சட்டையும், நீல நிற ஜீன்ஸ்பேண்ட் அணிந்து செல்லும் நபர் ஷேக்தாவூத் ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். ஷேக்தாவூத்திற்கு பின்னால் ஓடிவரும் நபர் புளூகலர் அரைக்கை டீ சர்ட், கருப்புகலர் ஜீன்ஸ் அணிந்துசெல்லும் நபர் பிரசாந்த். பிரசாந்த் பின்னால் செல்லும் வெள்ளை முழுக்கை சட்டை, கருப்பு வேட்டி அணிந்திருப்பவர் கலையரசன் இன்று நீதிமன்றம் ஆஜராகியுள்ளார். கார் பக்கத்தில் நீல நிற சட்டை போட்டிருக்கும் நபர் கோகுல்நாத் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். சிவப்பு நிற சட்டை அணிந்திருப்பவர் சாட்சி பிரகாஷ். சான்றாவணம் 35 பென் டிரைவ் நீதிமன்ற கணிணியில் Play செய்யப்பட்டு அதில் மஞ்சள் நிற பனியன் மற்றும் நீல நிற கால்சட்டை போட்டு முன்னால் ஓடும் நபர் கொலையுண்டு இறந்துபோன நபர் ரஞ்சித்குமார். அவருக்கு பின்னால் வெள்ளை முழுக்கை சட்டையும், கருப்பு

கலர் பேண்ட் அணிந்து செல்லும் நபர் கூல்மணி காலை தடுக்கிவிட்டால் ரஞ்சித்குமார் கீழே விழுந்துவிட்டார். சூர்யா வால்கத்தியுடன் மஞ்சள்கலர் டீ சர்ட் பனியன், அரைக்கால் டிராயர் போட்டுக்கொண்டு கூல்மணியும், மஞ்சள் நில டீ சர்ட் போட்டுக்கொண்டு ஓடும் இரண்டாவது நபருக்கு பின்னால் பிரவுன்கலர் முழுக்கை சட்டை, அரைக்கால் டிராயர் போட்டு கொண்டு வீச்சருவாலுடன் ஓடி வருபவர் சீனிவாசன். ரஞ்சித்குமாரை வெட்டுகிறார். சீனிவாசனும், சூர்யாவும், ரஞ்சித்குமாரை மாறி மாறி வெட்டுகிறார்கள், அதை சுற்றி கூல்மணி, பிரசாத், கலையரசன் ஆகியோர்கள் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். சூர்யாவும், சீனிவாசனும், ரஞ்சித்குமாரை வெட்டி முடித்த பிறகு சீனிவாசன் வைத்திருந்த வீச்சருவாளை கலையரசன் வாங்கி ரஞ்சித்குமாரை ஒரு வெட்டு வெட்டுகிறார். அதன் பிறகு கலையரசனிடம் வீச்சருவாளை கூல்மணி (எ) மணிகண்டன் வாங்கி ரஞ்சித்குமாரை வெட்டுகிறார். அதன் பிறகு அங்கிருந்து எல்லோரும் ஓடுகிறார்கள், அந்த காட்சிதான் அ.த.சா.ஆ.35 ல் பதிவாகியுள்ளது. அது நீதிமன்றத்தில் Play செய்யப்பட்டு முடிக்கப்பட்டது. முதலில் Play செய்யப்பட்ட அ.த.சா.ஆ.33 CCTV கேமரா அட்சயா ஹோட்டல், அ.த.சா.ஆ.35 CCTV கேமரா காட்சிகள் 91 காபி த/பெ என்ற கடையில் பதிவான காட்சிகளாகும். அ.த.சா.ஆ.37 CCTV கேமரா காட்சிகள் பெட்ரோல் பங்கில் எடுக்கப்பட்ட காட்சிகளாகும். அதனை அ.த.சா.ஆ.37 ல் உள்ள CCTV ஐ Play செய்ததில் அதில் உள்ள வீடியோ போல்டர்

எண்.A02_20201217165200.mp4 Play செய்ததில் உள்ள காட்சிகளை பார்த்து சாட்சி அளித்துள்ளார். Hero Honda Splendor Plus இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN-48-J-1796 அதை ஓட்டி வருபவர் கூல்மணி (எ) மணிகண்டன், அவருக்கு பின்னால் உட்கார்ந்திருப்பவர் பிரசாந்த். முகப்பு விளக்கு எரிந்து கொண்டு பஜாஜ் பிளாட்டினம் என்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN-47-AQ-8502 என்ற வாகனத்தை கலையரசன் ஓட்டிக்கொண்டு, அதற்கு பின்னால் ஷேக்தாவூத் நடுவில் உட்கார்ந்து கொண்டும், அதற்கு பின்னால் கோகுல்நாத் என்பவரும் உட்கார்ந்து வந்தனர். TVS Sport அதன் பதிவெண் TN-47-AT-5008 என்ற இருசக்கர வாகனத்தில் சூர்யா என்பவர் ஓட்டிக்கொண்டும், அதன் பின்னால் சீனிவாசன் பின்னால் உட்கார வைத்துக்கொண்டும். பெட்ரோல் பங்கிற்கு இருசக்கர வாகனத்தில் சென்ற பிறகு மொட்டையடித்துக்கொண்டு தொப்பி போட்டிருக்கும் லுங்கி அணிந்திருக்கும் நபர் கோகுல்நாத், நீல நிற சட்டை, நீல நிற ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருக்கும் நபர் ஷேக்தாவூத். மற்றொரு நபர் மஞ்சள் கலர் முக்கால் பேண்ட், வெள்ளை நிற டீ சர்ட் போட்டு இரண்டு தோள்களிலும் கருப்புநிற பட்டையை போட்டு டீ சர்ட் அணிந்திருப்பவர் பிரசாத் ஆகியோர் நடந்து பெட்ரோல் பங்கிற்கு உள்ளே வருகிறார்கள். கலையரசன் ஓட்டிக்கொண்டு நடுவில் ஷேக்தாவூத் அமர்ந்துகொண்டு, அதற்கு பின்னால் கோகுல்நாத் அமர்ந்துகொண்டு TN-47-AQ-8502 பஜாஜ் பிளாட்டினம் வாகனத்தில் பெட்ரோல் பங்கில் இருந்து வெளியே செல்கிற காட்சி. மணிகண்டன் வண்டி

ஓட்டிக்கொண்டும், அதற்கு பின்னால் உட்கார்ந்த நபர் பிரசாந்த் என்பவர் உட்கார்ந்துகொண்டும் TN-48-J-1796 Hero Honda Splendor Plus என்ற இருசக்கர வாகனத்தில் இருந்து செல்லும் காட்சி. சூர்யா வண்டி ஓட்டிக்கொண்டும், அதற்கு பின்னால் நடுவில் ஸ்ரீனிவாசன் என்பவர் உட்கார்ந்து கொண்டும், கடைசியாக பிரசாத் என்பவர் உட்கார்ந்து கொண்டும் TN-47-AT-5008 என்ற இருசக்கர வாகனத்தில் செல்லும் காட்சி. அதனை அ.த.சா.ஆ.37 ல் உள்ள CCTV ஐ Play செய்ததில் அதில் உள்ள வீடியோ போல்டர் எண்.A03_20201217165200.mp4 Play செய்ததில் உள்ள காட்சிகளை பார்த்து சாட்சி அளித்துள்ளார். அதனை அ.த.சா.ஆ.37 ல் உள்ள CCTV ஐ Play செய்ததில் அதில் உள்ள வீடியோ போல்டர் எண்.A05_20201217165200.mp4 Play செய்ததில் உள்ள காட்சிகளை பார்த்து சாட்சி அளித்துள்ளார். TN-47-AT-5008 என்ற இருசக்கர வாகனத்தில் சூர்யா உட்கார்ந்து கொண்டு பெட்ரோல் அடித்துவிட்டு அதன் பிறகு சிறிது தூரத்தில் தள்ளிவந்து வண்டியை நிறுத்தி சீனிவாசன் என்பவரை நடுவிலும், பிரசாத் என்பவரை அதற்கு பின்னால் உட்கார வைத்துக்கொண்டும், இரண்டாவதாக TN-48-J-1796 என்ற வண்டியில் மணிகண்டன் உட்கார்ந்து பெட்ரோல் அடித்துக்கொண்டும், அதற்கு பின்னால் பிரசாந்த் என்பவரை உட்கார வைத்து கொஞ்ச தூரம் தள்ளிவந்து நிறுத்துகிறார். மூன்றாவது TN-47-AQ-8502 என்ற வாகனத்தில் கலையரசன் வண்டியின்மேல் உட்கார்ந்து கொண்டு பெட்ரோல் அடித்துக்கொண்டு கொஞ்ச தூரம் தள்ளிவந்து நிறுத்தி

நடுவில் ஷேக்தாவூத் என்பவரை உட்கார வைத்தும், அதற்கு பிறகு கோகுல்நாத் என்பவரை உட்கார வைத்துக்கொண்டும் புறப்பட தயாராக இருக்கும் காட்சிகள். அதன் பிறகு இவ்வழக்கில் விசாரணை முற்றிலும் முடித்து 12.05.2021 ல் எதிரிகள் 1.கலையரசன், 2.பிரசாந்த், 3.பிரசாத், 4.ஷேக்தாவூத், 5.கோகுல்நாத், 6.கிரி (எ) கிரிதர், 7.மணிகண்டன் (எ) கூல்மணி, 8.சீனிவாசன், 9.உதயநிதி (எ) சூர்யா ஆகியோர்கள்மீது சட்டப்பிரிவு 147, 148, 120(b) 302 இ.த.ச. உ/இ 149 இத.ச. மற்றும் 3 (2)(v) SC&ST(POA) Amendment Act 2018 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சியை இந்த நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிகளை சரியாக அடையாளம் காண்பித்தார். அ.சா.3 ராமர், அ.சா.4. சிவக்குமார், அ.சா.5.வான்மதி, அ.சா.6.அரசகுமார், அ.சா.7.திருமாவளவன், அ.சா.8.ஜெயந்தி, அ.சா.12.செல்வராஜ், அபு (எ) முகம்மது அபு, நரேன், கோபாலகிருஷ்ணன், சூர்யா, சுரேஷ் ஆகியோர்கள் கொடுத்த வாக்குமூலங்களைதான் நான் பதிவு செய்துள்ளேன்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

**1, 3, 4** மற்றும் **5** ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**,**

<u>**6** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

6 ஆம் எதிரியை பொருத்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் நீங்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 6 ஆம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**8** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**.**

<u>முடியும் நேரம் **6.13** மணி</u>

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.